மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துவக்கப்பட வேண்டியது கால்நடைக் கிளை நிலையமா அல்லது அலுவலகமா என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு புதியதாக கால்நடைக் கிளை நிலையம் அமைக்க இருக்கிறோம். அதனடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் இந்த ஆண்டே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

158—

சுற்றுலாத் தலம்

***21488—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தாமரைக்குளம், பழையாறு கடலில் கலக்கும் கழிமுகப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2014 ஜூலை 16]

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தாமரைக்குளம் பகுதியில் பழையாறு கடலில் கலக்கும் மணக்குடி காயல் பகுதி, வனத் துறையினரால் பறவைகள் புகலிடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி கடற்பகுதியின் அருகில் உள்ளதால் எவ்வித மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தாமரைக்குளம், பழையாறு கடலில் கலக்கும் மணக்குடி காயல் சுற்றுலாப் பகுதியில் சதுப்பு நிலங்கள் உள்ளன. காயல் பகுதி நடுவே அலையாத்திக் காடுகள், அதாவது மாங்குரோவ் காடுகள் அமைந்துள்ளன. இந்தக் காடுகள் சுனாமி ஏற்பட்டால் அலைகளைத் தடுத்து நிறுத்தும். காயல் பகுதிகளில் ரஷ்யா, சைபீரியா போன்ற அயல்நாடுகளிலிருந்தும், இமாச்சல் பிரதேசம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களிலிருந்தும் கறுப்பு அரிவாள் மூக்கன், வெள்ளை அரிவாள் மூக்கன், நீர் காகம், நீலக்கோழித்தாரை, ஊசிவால் வாத்து, பாம்புத்தாரா, நெடுங்கால் நாரை, கூழைக்கடா போன்ற பறவைகள் வந்து செல்கின்றன. எனவே, இந்த அரிய காட்சியினை ரசிக்க படகு சேவையை ஏற்படுத்தவேண்டும். சென்னை அருகே சிறப்பு நகரம் அமைக்க பெரும்பாக்கம், பள்ளிக்கரணையில் இடம் தேர்வு செய்யப்பட்ட நிலையில், சுற்றுச்சூழல் ஆர்வலர்களால், அந்த இடத்தை சதுப்பு நிலக் காடுகள் என அறிவிக்க வேண்டும் எனக் கோரிக்கை வைக்கப்பட்டது. அவர்கள் கோரியதை ஏற்று, அந்த நிலத்தை வகை மாற்றம் செய்ததைப் போன்று, மணக்குடி காயல் பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.*

(முற்பகல் 11-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986-ன்படியும், இந்திய கடற்கரை மண்டல ஒழுங்குமுறை அறிவிக்கை, 1991-ன்படியும், கடலோரங்களின் கழிமுகப் பகுதியில் எந்தவித மேம்பாட்டுப் பணிகளும் செய்ய இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ள மாங்குரோவ் காடுகளைப் பாதுகாக்க வேண்டும். அது அந்தப் பகுதியில் சுனாமி ஏற்படும் போது தடுப்புச் சுவர் போல செயல்பட்டு வருவதால், அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, வெள்ளாங்கோடு ஊராட்சிக்குட்பட்ட சிதறால் மலைக் கோயில் கடல் மட்டத்திலிருந்து 1,100 அடி உயரம் கொண்டது. மலைக் கோயிலின் உள்பிரகாரத்தில் இருந்து தாமிரபரணி ஆறு வரை செல்ல இரகசிய பாதை உண்டு; தண்ணீர்வரும் உறிஞ்சுப் பாறையும் உள்ளது. இங்கு ஜைன மதத் துறவிகள் தங்கி சமயப் பணியும், சமூகப் பணியும் ஆற்றி வந்தனர். இங்கு ஜைன பல்கலைக்கழகம் செயல்பட்டு வந்தது. இந்தக் கோயில் 9 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இந்தக் கோயிலில் மகாவீரர், பார்வதி, பார்சுவநாதர் சிலைகள் உள்ளன. மலை உச்சியில் Telescope நிறுவி, சுற்றுவட்டார அழகை ரசிக்கலாம். சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், மான் பூங்கா அமைக்க வேண்டும். மலையேறிச் செல்ல சாலை வசதியும், படிக்கட்டுகளின் ஓரங்களில் ஓய்வறைகள், கழிவறை மற்றும் குடிநீர் வசதியும் செய்து, மலை உச்சியில் பூங்கா அமைப்பதுடன் ரோப் கார் வசதியும் செய்யப்படுமேயானால், இந்த இடம் முழுமையான வசதிகளுடன் சுற்றுலாத் தலமாக அமைய வாய்ப்புள்ளது. எனவே, இதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 16]

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷன் கிளப் விழாவிற்கு வேட்டி அணிந்து சென்றவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதன்மீது அரசு எடுக்க நடவடிக்கை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் எல்லாம் தமிழர்களின் பாரம்பரிய உடையான வேட்டி அணிந்து வந்துகொள்வதற்கோ அல்லது உரையாற்றுவதற்கோ எவ்விதத் தடையும் இல்லாத சூழ்நிலையில், தமிழ்நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியில் வேட்டி அணிந்து பங்கேற்க தனியார் மன்றம் தடை விதித்திருப்பது அரசமைப்புச் சட்டத்திற்கும், ஜனநாயக மரபுகளுக்கும், தனி நபர் உரிமைக்கும், தமிழ் கலாச்சாரத்திற்கும் எதிரான செயல். (மேசையைத் தட்டும் ஒலி)*

11-7-2014 அன்று மாலை சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மன்றத்தில், அதாவது Tamil Nadu Cricket Association Club-*ன் கூட்ட அரங்கில், ஒரு பொது நிகழ்ச்சி,*